**தலைப்பு 286 – காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்**

-----------------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023யூன் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2022 திசெம்பர் 31 ஆந் திகதிய காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) கடந்த ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 113,025,610 ஆன உண்மையான வருமானத்தில் காலி மாவட்ட அலுவலகத்தினால் தென் மாகாண சபைக்கு செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 3,836,750 தவறுதலாக உள்ளடக்கப்பட்டதன் காரணமாக திணைக்களத்தின் உண்மையான வருமானம் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | 2023.02.28ஆம் திகதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களம், காலி மாவட்டச் செயலாளருக்கு வருமானத்தை திருப்பிச் செலுத்துவதற்கான அதிகாரத்தை வழங்கியுள்ளது. அந்த அதிகாரத்தின் பிரகாரம் காலி மாவட்ட செயலாளர் ஏப்ரல் மாதம் இந்த திருத்தத்தை செய்துள்ளார். | வருமானத்தை கணக்கிடும் போது,திணைக்களம் தொடர்பான வருமானம் மட்டுமே கணக்கிடப்பட வேண்டும். |

**(ஆ) மூலதன வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில்பௌதீக சொத்துக்கள் கட்டுமானம் அல்லது கொள்வனவு மற்றும் பிற முதலீட்டு கையகப்படுத்துதல் ஆகியவற்றின் கீழ் சேர்க்கப்பட வேண்டியஊழியர் பயிற்சி திட்டங்கள் தொடர்பான கொடுப்பனவுகள் ரூபா 643,772 ஆனது ,ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவுகளின் கீழ் சேர்க்கப்பட்டு கணக்கிடப்பட்டிருந்தது. | நீங்கள் குறிப்பிட்டுள்ளபடி,எதிர்வரும் ஆண்டுகளில் பௌதீக சொத்துக்கள் கட்டுமானம் அல்லது கொள்வனவு மற்றும் பிற முதலீட்டு கையகப்படுத்துதல் ஆகியவற்றின் கீழ் கணக்கிடப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | மீண்டெழும் மற்றும் மூலதன செலவுகள் சரியாக கணக்கிடப்பட வேண்டும். |

**(இ) வைப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நி.பி. 571 (2) மற்றும் (3) பந்திகளின் பிரகாரம் அனைத்து காலாவதியான வைப்புத்தொகைகளும் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியதுடன் ii மற்றும் iii ஆம் வகுப்புகளில் காலாவதியான வைப்புத்தொகைகளின் விடயத்தில் அவற்றை அரச வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்ட பின்னர் திரும்பப் பெறுவதற்கான கோரிக்கைகளை முடிந்தவரையில் தவிர்க்கும் பொருட்டு அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படுவதற்கு முன்னர் விசாரிக்கப்பட்டு பார்க்கப்பட வேண்டியதுடன் உரிய விபரங்கள் கிடைக்கும் வரை வைப்புக் கணக்கில் காலவரையின்றி வைத்திருக்கப்படுகின்ற பணம் காலாவதியான வைப்புத்தொகையாகக் கருதப்பட்டு பெறுவனவுக்காக இடமளிக்கப்படாதவாறு சம்பந்தப்பட்ட கணக்கில் அல்லது அரச வருமானத்தில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் , 2015 முதல் 2020 வரை பொது வைப்புக்கணக்கில் தக்க வைக்கப்பட்டிருந்த ரூபா 51,484,589 பெறுமதியான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2015 முதல் 2020 வரை பொது வைப்பு 2022/12/31 இல் 2023 ஆம் ஆண்டில் இன்றுவரை பொது வைப்புக்கணக்கு இலக்கம் 6000-0-0-16-0-20 ஒப்பந்த வைப்புக்கள் ரூபா 14,719,396 தீர்க்கப்பட்டுள்ளதுடன் மிகுதிப்பெறுமதி ரூபா 51,484,589 ஆகும். தீர்க்கப்பட்ட முறை பின்வருமாறு.<br><br>மத்திய பொறியியல் ஆலோசனைப்பணியகத்திற்கு ரூபா 63,406,325இற்கு திணைக்களத்தின் நான்காவது மாடியின் கட்டுமானப் பணிகளுக்கு 2021.05.04 தேதியிட்ட அமப/21/06/13/322/006ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, இதுவரை ரூபா 13,448,677 தொகையொன்றுக்கான வவுச்சர்கள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் பொது வைப்புக் கணக்கில் சேமிக்கப்பட்டுள்ளது. பொது வைப்பு கணக்கு எண். 6000-0-0-2-0-68 டெண்டர் வைப்புக்களில் மீதமுள்ள பெறுமதிரூபா 105,000 ஆகும். ஒப்பந்ததாரர்களுக்கு பலமுறை தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இந்த ஆண்டு இறுதிக்குள் பணம் செலுத்துவதற்கு வவுச்சர்கள் சமர்ப்பிக்கப்படாவிட்டால்,நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். தற்காலிக வைப்புத் தொகையானரூபா 98,144 தீர்வு செய்யப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு காலாவதியான வைப்புக்கள் தீர்க்கப்பட வேண்டும். |

**(ஈ) நிதியல்லாச் சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் மிஹிகட மதுரா கட்டிடத்தின் நான்காவது தளத்தை நிர்மாணிப்பதற்காக இந்த அறிக்கையின் திகதிவரை செலவிடப்பட்ட ரூபா 24,114,494 மற்றும் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 320,750 உம் ஆக மொத்தத் தொகை ரூபா 24,435,244 ஆனது மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை வேலைகளாக நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மிஹிகட மதுராவின் நான்காவது தளத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 24,114,494 ஆன செலவு 2023 பிப்ரவரி கணக்குப் பொழிப்பில் கணக்கிடப்பட்டுள்ளது. கட்டிடத் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 320,750 2023 ஏப்ரல் இல் செலுத்தப்பட்டிருந்ததுடன் அப்பெறுமதி 2023 மே கணக்குப் பொழிப்பில் கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அனைத்து கொடுக்கல்வாங்கல்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ii) | திணைக்களங்களுக்கு இடையிலான மாகாண ஆணையாளர் அலுவலகங்கள் மற்றும் உதவி காணி ஆணையாளர் அலுவலகங்களுக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ வீடுகள், காணிகள் மற்றும் கட்டிடங்கள் இறுதியாக மதிப்பீடு செய்யப்பட்ட ஆண்டு 2013 ஆக இருந்ததால், அந்தக் கட்டிடங்களின் தற்போதைய மதிப்பிடப்பட்ட பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை. | திணைக்களத்திற்கு சொந்தமான உத்தியோகபூர்வ வீடுகள், காணிகள் மற்றும் கட்டிடங்கள் 2013, 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள போதிலும் அவற்றை மீள் மதிப்பீடு செய்து பெறுமதியை சமர்ப்பிக்குமாறு 2022.05.09 மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த மீள்மதிப்பீட்டு பெறுமதி கிடைத்தவுடன் கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அனைத்து நிலையான சொத்துக்களும் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

**(உ) பதிவேடு மற்றும் புத்தகங்கள் பராமரிக்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களத்திற்குச் சொந்தமான உத்தியோகபூர்வ குடியிருப்புகள் மற்றும் சுற்றுலா பங்களாக்களுக்கு முறையான மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவெடொன்று 2023 மே வரையில் பராமரிக்கப்படவில்லை. | இந்த திணைக்களத்தில் நாளதுவரையாக்கப்பட்ட முறையான பதிவேடு இல்லாததால், எனது இலக்கமLCGD/AD/8/மதிப்பீடு/2022 ஆன மற்றும் 2023/03/31 ஆம் திகதிய கடிதத்தில் 06 மாகாணங்களுக்கு இடையேயான காணி ஆணையாளர் அலுவலகங்கள் மற்றும் 02 உதவி காணி ஆணையாளர் | முறையான நிலையான சொத்துக்கள் பதிவெடொன்று பராமரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அலுவலகங்கள்,இததிணைக்களத்திற்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் சுற்றுலா பங்களாக்கள்,காணி மற்றும் கட்டிடங்கள் பற்றிய தகவல்கள் ஒரு படிவத்தின் மூலம் பெறப்பட்டு செய்யப்பட்டு, அதற்கான முறையான பதிவேடு தயாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதிவரை மாகாணங்களிற்கு இடையிலான கமநல குடியிருப்புக்களிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை காணி குத்தகை வருமானம்ரூபா 98,465,851 ஐ அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. நிலுவை வருமானத்திலிருந்து 47 சதவீதம் அதாவது ரூபா 46,349,919 தொகை 3 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலுவையாக உள்ளதுடன்,மீளாய்வாண்டில் நிலுவை வருமானத்திலிருந்து அறவிட்டிருந்த தொகை ரூபா 16,013,918 ஆகும். | மீளாய்வாண்டின் இறுதிவரை காணி மற்றும் ஏனைய குத்தகை வருமானம்,நிலுவை குத்தகைப் பெறுமதி ரூபா 98,465,851 ஆகும். அளவிலிருந்து 2023.03.31 திகதியளவில் ரூபா 8,037,239 ஆன குத்தகை அளவொன்றை அறவிட முடியுமாக இருந்தது.சம்பந்தப்பட்ட குத்தகைதாரர்களுக்குத் தெரிவித்து, மாகாணங்களுக்கு இடையிலான அலுவலகங்களால் நிலுவைத் தொகையை வசூலிக்கும் நடவடிக்கை தற்போது நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை குத்தகை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |

**2.2 செலவின முகாமைத்துவம்**

வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல், ஒதுக்கீடுகளை மாற்றுதல், துணை வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகள் மூலம் ஒதுக்கீடுகளைப் பெறுதல் மற்றும் பயன்படுத்துதல், ஒதுக்கீடுகளின் பயன்பாடு, நிலுவைகள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வின்போது மீண்டெழும் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 509,370,000 ஆன நிகர ஒதுக்கீட்டில் 8 சதவீதம் அதாவது ரூபா 41,757,636 உம், மூலதன செலவுகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 70,600,000 ஆன நிகர | 2022 மீண்டெழும் நிகர ஒதுக்கீட்டில் 8 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. தேசிய வரவு செலவுத் திட்டம் மற்றும் அரச நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக செலவினங்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் அரசாங்க செலவினங்களைக் குறைக்கும் முயற்சிகளே இதற்குக் காரணம் என | ஒதுக்கீடுகள் அதிகபட்சம் பயன்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| ஒதுக்கீட்டில் 69சதவீதம் அதாவது ரூபா 49,014,496 உம் ஆக நிகர ஒதுக்கீடு சேமிக்கப்பட்டிருந்தது. | நான் சுட்டிக்காட்டுகிறேன். மேலும், பொருட்கள் கொள்வனவு நிறுத்தி வைக்கப்பட்டமை மற்றும் மூலதன இயல்பின் அனைத்து வேலைகளும் நிறுத்தப்பட்டதால் மூலதனச் செலவில் 69 சதவீதம்சேமிக்கப்பட்டிருந்தது.மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளமையினால், 286-2-1-2106 செலவு விடயத்தின் கீழ் பிரதேச செயலகங்களுக்கு கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கணனிகளை கொள்வனவு செய்வதை இடைநிறுத்தியமை,போன்ற நடவடிடிக்ைகள் மேற்படி சுற்றறிக்கை பிரகாரம் மேற்கொள்ளப்பட்டதால் மேற்படி இரண்டு செலவு விடயத்தின் கீழான ஒதக்கீடுகள் 86 சதவீதம் மற்றும் 77 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தன. மேலும், முதுமாணி கற்கைநெறிகளுக்காக அதிகாரிகளின் விண்ணப்பங்கள் பெறப்படாமையால்65 சதவீதமான ஒதுக்கீடுகள் சேமிக்கப்பட்டிருந்தன |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளது.

**அவதானிப்புகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை | - | | | |
| (i) xxiv அத்தியாயம் 4.2.5 பந்தி(அ) | 420,813 | திருப்பிச் செலுத்தி முடிக்கப்படாத கடனிலிருந்து அறவிடுவதற்காக மீதமிருக்கும் தொகையும், அரசிற்கு அல்லது லோகோர் ஆர்யா நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ஏனைய | ஓய்வு பெற்ற அதிகாரிகளின் கடன் நிலுவை ஓய்வூதிய பணிக்கொடை தொகை மூலம் வசூலிக்கப்பட உள்ளது. ஜி.ஜி மார்ட்டினிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 19,940 | தாபனக் கோவையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | தொகையும்,ஓய்வூதியப் பணிப்பாளர் உத்தியோகத்தரின் மாற்றப்பட்ட ஓய்வூதியம் அல்லது பணிக்கொடையிலிருந்து அறவிடப்பட வேண்டியுள்ளபோதிலும், 5 ஆண்டுகளுக்கும் மேலாக ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவரின் ரூபா 19,940 உம், 3-12 மாதங்களுக்கு இடைப்பட்ட ரூபா 264,302 உம் 1-3 மாதங்களுக்கு இடைப்பட்ட ரூபா 136,571 ஆன அறவிடப்படவேண்டிய மீதிகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | மனைவிக்கு விதவைகள் ஓய்வூதியம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2023.03.22 அன்று கண்டி கங்கவட கோறளை பிராந்திய செயலகத்திற்கு மீண்டும் ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. டி.ஏ.ஜி.தர்மசிறியிடமிருந்துரூபா 148,732.00 உம் எம்.கே.சிறிவர்தன (பொது அதிகாரி) ரூபா 115,570 உம் டபிள்யூ.ஏ.செனவிரத்ன (கிராம அதிகாரி) ரூபா 1,544 மற்றும் பி.இளங்கசிங்க ரூபா 23,682, கே.எம்.எஸ். குமாரசிங்க ரூபா 111,345 ஓய்வூதியப் பணிக்கொடைதொகையிலிருந்து அறவிடப்படுவ தற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | xxiv அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 பிரிவுகள் | 380,076 | (i) சேவையில் இருந்து விலகிய அதிகாரிகளிடமிருந்து 1 முதல் 12 மாதங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் ரூபா 199,354 ஆன கடன் மீதியொன்று மற்றும் மரணித்த அதிகாரியிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 180,722 தொடர்பாக பிரதான கடனாளியிடமிருந்து அறவிடப்பட முடியாத சந்தர்ப்பத்தில் பின்பற்ற வேண்டிய பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கை பிணையாளரைப் பொறுத்தமட்டில் பின்பற்றப்பட்டு பிணையாளரிடம் இருந்து | இந்த அதிகாரி 2022.08.18 அன்று ராஜினாமா அறிவிப்பை வெளியிட்டுள்ளார். நிலுவைக் கடன் மீதி ரூபா 199,354.00 ஆகும்.. அதிகாரியின் தனிப்பட்ட முகவரிக்கு 2023.03.21 இல் அனுப்பப்பட்டதுதிருகோணமலை பிரதி காணி ஆணையாளரிடம் கடமையாற்றிய இந்த அதிகாரி 2022.11.13 அன்று மரணமடைந்தார். 2022 நவம்பர் மாத சம்பளத்திலிருந்துஇடர் | தாபனக் கோவையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அத்தொகை அறவிடப்பட வேண்டியுள்ளதுடன் , பிரதான கடனாளி இறந்துவிட்டால் அவரது வாரிசுகளிடமிருந்து அறவிட முடியாவிட்டால் சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் பெறப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கடன் தவணை மற்றும் முழுமையான விழா முற்பண தவணை அறவிடப்பட்டுள் ளது.2022 திசெம்பர், 2023 ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் அவரது தந்தையால் அந்தந்த கடன் தவணைகள் செலுத்தப்பட்டிருந்ததுட ன் கடன் நிலுவை ரூபா 180,722 ஆகும். போதிய சேவைக்காலம் இல்லாததால் இறப்பு பணிக்கொடைக் கானஉரிமை இல்லாமையால் பிணையாளியிடமிருந்து கடனை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| நி.பி. 109(1) | 5,283,762 | மிகைக்கட்டணம் காபபுறுதி,பிணை போன்ற அனைத்து வழிகளிலும் திரும்பப் பெற வேண்டிய பணத்தின் அளவைத் தீர்மானித்தல், அனைத்து பூர்வாங்க வேலைகளையும் முடித்த பிறகு, சேதத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய அதிகபட்ச பெறுமதிக்கும் மற்றும் முடிவு செய்யப்பட்ட தொகைக்கும் இடையில் ஏதேனும் வித்தியாசமொன்று இருந்தால் அந்த வித்தியாசம் புத்தகத்தில் இருந்து | திணைக்களத்திற்குச் சொந்தமான எந்தவொரு வாகனத்தின் மொத்த அல்லது மதிப்பிடப்பட்ட விலையானது, விபத்து நேரத்தின் போது மறுசீரமைப்பு அல்லது பழுதுபார்ப்பதற்கான உண்மையான செலவை விட அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில், வித்தியாசமானது கணக்குகளில் பதிவளிக்கப்படாத மீதிகளாக காட்டப்பட்டுள்ளதுடன், | நிதிப் பிரமாணங்களி ன் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நீக்கப்படுவதற்கு , திணைக்களத்திற்கு அதிகாரம் இருந்தாலும், மொத்தத் தொகை ரூபா 5,283,762 ஆன 08 சந்தர்ப்பங்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அதன் பிரகாரம் இதில் குறிப்பிடப்பட்டுள்ள மீதி இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் கணக்குகளில் பதிவளிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (இ) | 2019திசெம்பர்17 ஆம்திகதிய இலக்கம் 08/2019 ஆம் இலக்க திறைசேரி செயலாளரின் சுற்றறிக்கை | அனைத்து அரச நிறுவனங்களினால் மின்-பெறுகைக்காக 2020 சனவரி 31 இற்கு முன்னர் பதிவு செய்ய வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை தொடர்புடைய பதிவுபெறப்பட்டிருக்கவில்லை. | மின்-பெறுகைக்காக எமது திணைக்களத்தின்இணையதளம் செயல்படாமல் இருந்ததால்,மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை பதிவு பெறப்படவில்லை. இந்த ஆண்டு அதற்கான பதிவினைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | பொது நிர்வாக மற்றும முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை | | | |
| | 2018 சனவரி 24 திகதிய 05/2018 (1) கொண்ட சுற்றறிக்கையின் திருத்திய 2008 பெப்ரவரி 06 திகதிய இலக்கம் 05/2008 கொண்ட சுற்றறிக்கை | திணைக்களத்தினால் பிரசைகள்/சேவைபெறுனர் பிரகடனத்தை தயாரித்து அது பொதுமக்களுக்கு காட்சிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | திணைக்களத்திற்கான பிரசைகள்/சேவைபெறுனர் பிரகடனமொன்று கடந்த காலத்தினுள் நிலவிய நிலைமையின் அடிப்படையில் அதனை தயாரிப்பதில் சில தாமதமொன்று ஏற்பட்டுள்ளதுடன்,2024 ஆம் ஆண்டு தொடங்குவதற்கு முன்னர் அதற்கான நடவடிக்கை பூர்த்தி செய்யும் இயலுமை உள்ளதாக தயவுடன் அறிவிக்கிறேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடைந்து கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அரசாங்க காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் குத்தகை அடிப்படையில் காணிகளை வழங்கும் நோக்கத்துடன் ஒப்பிடும் போது குத்தகைக்கு விடுவதற்கு இலக்கிடப்பட்ட அளவு 1500 ஆக இருந்த போதிலும், உண்மையான அளவு 475 அதாவது 32 சதவீதமாகக் காணப்பட்டது. | குத்தகை தயாரிப்பில் அளவீடு மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகள் கிடைப்பதில் தாமதம் மற்றும் மதிப்பீட்டிற்குப் பிறகு குத்தகை தயாரிப்பதற்கு நிலுவை குத்தகை ஒரே தவணையாக செலுத்த வேண்டியுள்ளதாலும் அதில் ஏற்படுகின்ற தாமதங்கள் காரணமாக குத்தகைக்கு விடுவதற்கு இலக்கிடப்பட்ட அளவு 2022 ஆம் ஆண்டில் எதிர்பார்த்தவாறு செய்யப்படுவதற்கு முடியாதிருந்தது.நாட்டில் நிலவும் நெருக்கடி நிலை காரணமாக அதிகாரிகள் பணிக்கு சமூகமளித்தல் மட்டப்படுத்தப்பட்டதால் எதிர்பார்த்த இலக்கை அடைவதற்கு முடியவில்லை. | திட்டமிடப்பட்ட இலக்குகளை வெற்றிகரமாக அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி, அரசாங்கத்தின் காணித் தகவல் முகாமைத்துவ அமைப்பில் 100,000 காணித் துண்டுகளை உள்ளிடுவதற்கு திட்டமிடப்பட்டும் அந்த அமைப்பில் சேர்க்கப்பட்ட காணித் துண்டுகளின் எண்ணிக்கை 24,500 மட்டுமே ஆகும். இது 24 சதவீதமாகக் காணப்பட்டது. | 2022 இல் இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் சமாதான மீறல்கள் போன்ற காரணங்களால் களப் பரிசோதனைகள் செய்ய முடியாமல் போனது.மேலும்,e-Slims அமைப்பிற்கு எதிர்பார்த்த இலக்கிடப்பட்ட அளவு காணித் துண்டுகளின் எண்ணிக்கை உள்ளிடுவதற்கு முடியவில்லை.குறிப்பாக பிரதேச செயலக மட்டத்தில் எரிபொருள் நெருக்கடிக்கு முகங்கொடுத்து களப்பணியில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் காணிகளுக்குச் சென்று காணி அடையாளத்தை மேற்கொள்ள இயலாமையே இந்த காணி தகவல்களை உள்ளிடும் இலக்கை அடைய முடியாமல் போனதற்கு அடிப்படைக் காரணமாகும். | திட்டமிடப்பட்ட இலக்குகளை வெற்றிகரமாக அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | அரசாங்க காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தின் காணித் தகவல் முகாமைத்துவ அமைப்பின் மூலம் அனுமதிப் பத்திரங்கள் தயாரிப்பதற்கான இலக்கு 5000 ஆக இருந்த போதிலும் , உண்மையாக தயாரிக்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை 517 அதாவது 10 சதவீதமாகக் காணப்பட்டது. | பிரதேச செயலக மட்டத்தில் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன.2022 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட பொருளாதார, அரசியல் நெருக்கடி காரணமாக எரிபொருள் தட்டுப்பாடு, சமாதான மீறல்கள் போன்ற நெருக்கடி நிலை காரணமாக காணி உத்தியோகத்தர்களைகளப்பரிசோதனைகளுக்கு அனுப்புவதற்கு முடியாமையால் e-Slims அமைப்பிற்கு எதிர்பார்த்த இலக்கிடப்பட்ட அளவிற்கு காணிக் கச்சேரிகளை நடாத்தி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு முடியவில்லை.குறிப்பாக, பிரதேச செயலகங்களில் பணிபுரியும் காணி உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய | திட்டமிடப்பட்ட இலக்குகளை வெற்றிகரமாக அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உத்தியோகத்தர்களை வேறு கடமைகளுக்கு பயன்படுத்துவதால், காணி கடமைகளை மேற்கொள்ள முடியாத காரணத்தினால் கணனி மூலம் தயாரிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டது. | |
| (ஈ) | காணிப் பதிவுகளின் அடிப்படையில் தரவு அமைப்பில் தகவல்களைச் சேர்ப்பதற்கான பகுப்பாய்வு மீளாய்வு செய்யப்பட்டபோது 2020 ஆம் ஆண்டில் 63,955 உம், 2021 ஆம் ஆண்டில் 62,785 உம் ˙, 2022 ஆம் ஆண்டில் 24,499 உம் ஆக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் , இது 2021 ஆம் வருடத்துடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டில் 38,286 ஆகக் குறைந்துள்ளது. | 2022 ஆம் ஆண்டில், சமூக ஸ்திரமின்மை நாட்டின் அனைத்து துறைகளையும் மோசமாகப் பாதித்தது, மேலும் அனைத்து பிராந்திய செயலகங்களின் காணிவிவகாரங்களையும் நிலைமை மோசமாகப் பாதித்ததால், இது அமைப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்ட காணி விவகாரங்களையும் மோசமாகப் பாதித்துள்ளது.பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் காணி உத்தியோகத்தர்களை வேறு பணிகளுக்கு நியமித்தமையினால் காணி கடமை நடவடிக்கைகளில் சில இடையூறுகள் ஏற்பட்டன. அந்த சூழ்நிலையின் காரணமாக, 2021 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில் காணிப் பதிவேடுகளிலிருந்து தகவல்களை தரவு அமைப்பில் உள்ளிடுவதற்கான முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் இருந்தது. | திட்டமிடப்பட்ட இலக்குகளை வெற்றிகரமாக அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | துணை ஆவணங்களுடன் காணிகளின் களத் தகவல்களை தரவு அமைப்பில் உள்ளிடுவதன் முன்னேற்றம்.2020 ஆம் ஆண்டில் 90,337 ஆகவும், 2021 ஆம் ஆண்டில் 15,973 ஆகவும், 2022 ஆம் ஆண்டில் 14,766 ஆகவும் காணப்பட்டது.அதன் முன்னேற்றம் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2021 இல் 82 சதவீதமும், 2022 இல் 84 சதவீதமும் குறைந்துள்ளது. | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில், கொரோனா தொற்றுநோய் காணி அதிகாரிகளுக்கு ˙ அந்த காணிக் கடமைகளைச் செய்வதற்கு முடியாதிருந்தமை.காணி அதிகாரிகள் வேறு கடமைகளுக்கு அனுப்பப்பட்டமை.மேலும், 2022 இல் ஏற்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரமின்மை காரணமாக, 2020 ஆம் ஆண்டை விட 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் காணிகளின் களத் தகவல்களை தரவு அமைப்பில் உள்ளிடுவதில் முன்னேற்றம் குறைவாக இருந்தது. | திட்டமிடப்பட்ட இலக்குகளை வெற்றிகரமாக அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 செயற்திறன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 ஜனவரி 24 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை 02/2018 இன் இணைப்பு 01 படிவத்தின் அடிப்படையில், செயற்திறன் ஒப்பந்தங்கள் 2018 ஆம் ஆண்டு முதல் கையெழுத்திடப்பட வேண்டிய போதிலும் ˙,மீளாய்வாண்டின் | தற்போது செயற்திறன் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு வருகின்றன. | ஒவ்வொரு வருடமும் செயற்திறன் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட வேண்டும். |

திசெம்பர் 31 வரையில் செயற்திறன் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படவில்லை.

### 3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2/2020ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி எண். 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தின்படி வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பிம்சவிய கருத்திட்டத்தின் கீழ் திணைக்களத்தினால் காணி கச்சேரிகளை நடாத்துதல், அனுமதிப்பத்திரம் விநியோகித்தல்,ஒப்படை பத்திரம் விநியோகித்தல், நடமாடும் சேவை நடாத்துதல், பிரிவு தினம் நடாத்துதல் மற்றும் பிரச்சினைக்கு தீர்வு தேடுதல் போன்ற செயற்பாடுகளை திட்டமிட்டிருந்ததுடன், காணி கச்சேரிகளை நடாத்துவதை தவிர ஏனைய செயற்பாடுகளின் முன்னேற்றம் 3 இற்கும் 39 சதவீதத்திற்கும் இடையில் கீழான வீச்சளவில் காணப்பட்டன. | காணி அமைச்சிலிருந்து பெறப்பட்ட தகவலின்படி, அதன் ஒதுக்கீட்டு தொகை குறிப்பிடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 2018 ஆம் ஆண்டு காணி அமைச்சு மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கீழ் இருந்ததுடன் 2018.12.11 ஆம் திகதிய கடிதத்தின்படி 2018 ஆம் ஆண்டுக்காக காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்திற்கு அமைச்சு ரூபா 16,820,000 ஐ ஒதுக்கியுள்ளது. .தொடர்புடைய கடிதங்களின் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளன. திறைசேரியின் அச்சிடப்பட்ட தாள்கள் மற்றும் ஏனைய அறிக்கைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட திருத்தப்பட்ட அறிக்கைகளின்படி, காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் படி, செலவு ரூபா 47,000,000 என்பதாக தெரிவிககப்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்ட இலக்குகளை வெற்றிகரமாக அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் 30 காணி கச்சேரிகளை நடாத்த திட்டமிட்டு 71 காணி கச்சேரிகள் நடாத்தப்பட்டிருந்தன.அது வருடாந்த இலக்கிலும் அதிக பெறுமானத்தை கொண்டிருந்தது. அதன் பிரகாரம் நடாத்த முடியுமான வரவேற்கத்தக்க காணி கச்சேரிகளின் எண்ணிக்கை தொடர்பாக கவனம் செலுத்தாது கடந்த காலப்பகுதியில் மிகவும் குறைந்த இலக்கிலிருந்து திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2022ம் ஆண்டு முழுவதும் நெருக்கடி நிலை மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக திட்டமிட்ட களப்பணிகளை மேற்கொளவதற்கு முடியவில்லை.மேலும் மக்களை திரட்டி காணிகச்சேரிகளை நடத்துவதில் உள்ள சிரமம் காரணமாக எதிர்பார்த்த அளவு காணிக் கச்சேரிகள் திட்டமாக குறிப்பிடப்பட்டபோதிலும், அதை நடைமுறையில் நடாத்துவது கடினமாக உள்ளது. | தற்போதுள்ள திறனுக்கு ஏற்றவாறு இலக்குகள் அமைக்கப்பட வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் உத்தியோகபூர்வ குடியிருப்புகளின் கோப்புகளை சரிபார்த்ததில் தற்போது பயன்பாட்டில் உள்ள குடியிருப்புகள 89 உம்,பயன்பாட்டில் இல்லாத ஆனால் பயன்படுத்த முடியுமான குடியிருப்புகள் 59 உம், பயன்படுத்த முடியாத குடியிருப்புகள்அல்லது தற்போது காணி மட்டும் காணப்பட்ட சந்தர்ப்பங்கள் 61 உம்,ஏனைய திணைக்களங்களுக்கு ஒதுக்கப்பட்ட குடியிருப்புகள் 17 உம், அனுமதிக்கப்படாத குடியிருப்பாளர் வசிக்கின்ற குடியிருப்புகள் 14 உம், கையளித்தல் நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் குடியிருப்புகள் 08 உம ஆக 248 குடியிருப்புகள் காணப்பட்டன.அந்த வீடுகளில் தண்ணீர் வசதியின்மை, பயன்பாடுகள் சிதைவடைந்து, மேற்கூரை மற்றும் சுவர்கள் சிதைவடைந்துள்ளமை,அங்கீகாரமற்ற ஆக்கிரமிப்பு, குடியிருப்புகளின் முறைசாரா வெளியேற்றம், அதற்கான அபராத வாடகை வசூலிக்காமை, அடுக்குமாடி குடியிருப்புகளை முறையாகவும் ஒழுங்காகவும் விண்ணபித்த அதிகாரிகளுக்கு் ஒப்படைக்காமை. மற்றும் குடியிருப்புகளுக்கு உரித்தல்லாத அலுவலர்களுக்கு குடியிருப்புகள் வழங்கப்பட்டிருந்தமை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன. அந்த குடியிருப்புகள் தொடர்பாக,2022 ஏப்ரல் 04 ஆம் திகதிய திறைசேரி செயலாளரின் சொத்து முகாமைத்துவச் சுற்றறிக்கை இலக்கம் 05/2022 இன் படி, அரசாங்கத்தின் சொத்துக்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கவும், அதிகபட்சமாக உறுதிசெய்யவும், அரசுக்குச் சொந்தமான அனைத்து நாணயமற்ற சொத்துகளையும் முறையாக ஆவணப்படுத்தி பராமரிக்கவும். அரசாங்கச் சொத்தின் செயல்திறன் மற்றும் அறிக்கையிடல் என்பது | • சட்ட விரோதமாக குடியிருப்போர் மீது கூடிய விரைவில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும்<br>• தேவைக்கேற்ப சட்ட நடைமுறைகளைப் பின்பற்றி அவர்களை வேறொரு அரசு நிறுவனம் அல்லது வெளி தரப்பினருக்கு மாற்றுவதற்கான நடவடிக்கையை எடுப்பதற்கும்<br>• ஒப்பந்த காலம் முடிந்த பிறகும் தங்கியிருக்கும் அதிகாரிகள்/நபர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும்<br>• தற்போது பயன்பாட்டில் இல்லாத ஆனால் பயன்படுத்தக்கூடிய மாகாணங்களுக்கிடையேயான அலுவலகத்திற்கு சொந்தமான குடியிருப்புகள், காணிகள் மற்றும் கட்டிடங்களை திறம்பட பயன்படுத்துவதற்கு தேவையான மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கும்<br>• பயன்படுத்த முடியாத குடியிருப்புகள், காணி மற்றும் பழுதுபார்க்கப்பட வேண்டிய கட்டிடங்களுக்கு மதிப்பீடு தயாரித்து அனுப்புவதற்கும்<br>• குடியிருப்புகளுக்கு வசூலிக்கப்படும் வாடகை குறித்து மாதந்தோறும் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு அனுப்பப்படுவதாகவும் | அடுக்குமாடி குடியிருப்புகளின் உரிமை மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு, முறையான சொத்து பதிவேட்டை பராமரிப்பதற்கு, அடுக்குமாடி குடியிருப்புகளை வழங்குவதற்கு, வாடகை வசூலிப்பது தொடர்பாக முறையான நடைமுறையொன்றை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அனைத்து நிறுவனங்களின் தலைவர்களின் கட்டாயச் செயற்பாடாக உள்ளதுடன் ,அனைத்து அரச நிறுவன தலைவர்களால் அவர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள நிறுவனங்களின் அனைத்து நிதி அல்லாத சொத்துக்களும் சொத்து முகாமைத்துவச் சுற்றறிக்கையின்எற்பாடுகளின் பிரகாரம் நாளதுவரையாக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் கொம்ப்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டிற போதிலும் திணைக்களத்திற்கு சொந்தமான குடியிருப்புகள் மற்றும் சுற்றுலா பங்களாக்கள் பற்றிய விவரங்கள் நாளதுவரையாக்கப்பட்டு முறையாக ஆவணப்படுத்தப்படவில்லை. | தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>• மேலும் தற்போதுள்ள கட்டிடங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு முன்னுரிமைகளின்படி எதிர்காலத்தில் செய்யப்படும் என்றும் உத்தியோகபூர்வ குடியிருப்புகள், காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான தகவல்கள் முறையாக புதுப்பிக்கப்பட்டு 03 மாதங்களுக்கு ஒருமுறை அனைத்து மாகாணங்களுக்கு இடையிலான காணி ஆணையாளர் அலுவலகங்கள் மற்றும் உதவி காணி ஆணையாளர் அலுவலகங்களிடமிருந்து பெறப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | அரச உத்தியோகபூர்வ குடியிருப்புக்கள் தமது நிறவனத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் என்றும்,, இந்த சொத்துக்கள் செயலற்று அல்லது தவறாகப் பயன்படுத்தப்படாமல்,சுற்றறிக்கைகள் மற்றும் தாபனக்கோவையின் சட்டங்கள் விதிமுறைகளுக்கு இணங்க செயற்திறனாகவும் திறமையாகவும் பயன்படுத்துவது நிறுவனத்தின் பொறுப்பொன்றாக இருந்த போதிலும் அவ்வாறு செய்யப்படவில்லை. | தற்போதுள்ள கட்டிடங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு முன்னுரிமைகளின்படி எதிர்காலத்தில் செய்யப்படும் என்றும் உத்தியோகபூர்வ குடியிருப்புகள், காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான தகவல்கள் முறையாக புதுப்பிக்கப்பட்டு 03 மாதங்களுக்கு ஒருமுறை அனைத்து மாகாணங்களுக்கு இடையிலான காணி ஆணையாளர் அலுவலகங்கள் மற்றும் உதவி காணி ஆணையாளர் அலுவலகங்களிடமிருந்து பெறப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | உத்தியோகபூர்வ குடியிருப்புக்கள் மூலம் அதிக பட்ச பயன்கள் பெறப்பட வேண்டும். |

**3.5 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலக்கம் KK - 6496 வாகனத்தின்2018 ஜுலை 06ஆம் திகதிய விபத்து தொடர்பான சேதத்தின் மதிப்பு ரூபா 884,621 ஆகும். நி.பி.104(4) இன் படி விசாரணை நடாத்தப்பட்டு சாரதியே பொறுப்பு என்று கூறப்பட்டுள்ள போதிலும் சாரதி செய்த | நி.பி.104 இறுதி விசாரணைக் குழுவிற்கு இலக்கம் 3/2/1 மற்றும் 2023.05.16 கடிதத்தின் பிரகாரம் சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் தலைமையின் கீழ் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு விசாரணைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு | விரைவில் நட்டம் பொறுப்பு வாய்ந்த நபரிடமிருந்து அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முறையீட்டின் அடிப்படையில் மீண்டும் நி.பி 104(4) விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ள போதிலும் 2023 மே கணக்காய்வு திகதி வரை நட்டத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வருவதாகவும், சபையின் தீர்மானத்தின் பிரகாரம் விபத்தினால் ஏற்பட்ட சேதங்கள் எதிர்காலத்தில் மீளப்பெறப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | வாகன இலக்கம் NA– 9290 ஆனது 2018ஒக்டோபர் 31 அன்று விபத்தில் சிக்கியதுடன் அதன் சேதத்தின் மதிப்பு ரூபா 4,036,061 ஆக இருந்ததுடன் காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து ரூபா 3,389,561 மீளச் செலுததப்பட்டிருந்தபோதிலும் , திணைக்களத்தினால் செலுததப்பட்ட தொகை ரூபா 646,500 ஆகும். உரிய நிலுவைத்தொகை நி.பி.109 இன் பிரகாரம் பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடப்படுவதற்கு அல்லது கணக்குகளில் இருந்து நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | விபத்து தொடர்பில் சாரதிக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு பொதுநிர்வாக அமைசசிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.அந்த அமைச்சினால் வழங்கப்பட்ட தீர்மானத்தின்படி காப்புறுதி நிறுவனம் திருப்பிச் செலுத்திய தொகையின் பின்னர் மீதியான ரூபா 646,500 ஐ அறவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | ஏற்பட்ட நட்டம் சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து உடனடியாக வசூலிக்கப்பட வேண்டும். |
| (இ) | வாகன இலக்கம் PF –6074 இன் 2022 திசெம்பர் 21இல் விபத்து தொடர்பான சேதத்தின் மதிப்பு ரூபா 931,185 ஆகும். நிதிப்பிரமாணம் 109 இன் கீழ் நட்டத்தை பதிவளிப்பதற்கு முன்மொழியப்பட்டாலும், இது தொடர்பாக கணக்குகளில் வெளிக்காட்டப்படவில்லை. | இந்த விபத்து தொடர்பாக பழுது பார்க்கும் பணிகள் நடைபெற்று வருவதுடன்,முகவர் நிறுவனத்தால் வழங்கப்பட்ட மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை முழுமையாக காப்பீட்டு நிறுவனத்தால் திருப்பிச் செலுத்தப்படாததால், இயந்திரவியல் பொறியாளரின் பரிந்துரையின்படி மற்றொரு பதிவு செய்யப்பட்ட முகவர் நிறுவனத்தின் மூலம் செய்யப்படுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. | இந்த சேதம் தொடர்பாக கணக்குகளில் வெளிக்காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வாகன இலக்கம் PD –6509 2021 திசெம்பர் 23இல் விபத்துக்கள்ளாகி அச்சேதத்தின் மதிப்பு ரூபா 2,161,650 ஆக இருந்ததுடன் அதற்காக 2023 மே வரையிலும் காப்பீட்டு நட்டஈட்டை பெறுவதற்கு அல்லது நிதிப்பிரமாணம் 109 இன் பிரகாரம் இதற்கான . பொறுப்பு வாய்ந்த நபரிடமிருந்து நட்டஈட்டடைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | விபத்து நடந்து 10 மாதங்கள் ஆகியும் முகவர் நிறுவனத்தினால் பழுதுபார்க்கத் தொடங்காததால், வாகனம் பழுதுபார்ப்பதற்காக வேறு பதிவு செய்யப்பட்ட முகவர் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டது. தற்போது, பழுதுபார்கும் பணிகள் நடைபெற்று வருவதுடன், பழுது பார்க்கப்பட்ட பின்னர் செலவழிக்கப்பட்ட தொகை, காப்பீட்டு நிறுவனத்தால் திருப்பி அளிக்கப்படும் என்றும், திருப்பிச் செலுத்தப்பட்ட பினனர் மீதி தொகை இருப்பின் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செயயப்பட்டு அறவிடப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு விரைவில் நட்டம் அறவிடப்பட வேண்டும். |

**3.6 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் வருடாந்த அறிக்கை பிரகாரம் இலங்கையின் மொத்த காணி பிரதேசங்களின் 20 சதவீதமான அளவு அரச காணிகள் தொடர்பான நேரடி பொறுப்பை திணைக்களத்திற்கு சாட்டுவதாக இனங்கண்டிருந்ததுடன் அக் காணிகளிற்குரியதாக, 1931 ஆண்டின் திணைக்களம் நிறுவப்பட்ட திகதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட காணி வழங்கல்களை உள்ளடக்கி தயாரித்த காணி பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | அரச காணிகள் தொடர்பாக மதிப்பீடொன்றை செய்து காணித் தகவல் தொகுதியொன்றை தயாரிக்க 2020 ஆண்டு இறுதிப் பகுதியில் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அரச காணிகளை வழங்குதல் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதும் இத் தகவல் தொகுதியை தயாரித்ததன் ஓர் நோக்கமாகும். அது தொடர்பான தகவல்கள் தற்போது கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் திரட்டப்படுகின்றன. இவ் வேலைத் திட்டம் 2022 ஒக்டோபர் 30 திகதியுடன் முடிவடையவிருந்த போதும், நாட்டில் நிலவும் நிகழ்கால நிலைமை காரணமாக அதன் காலஎல்லை 2023செப்டெம்பர் 30 திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.அத்துடன், அரச நிலத்தை அகற்றுதல் தொடர்பான நடவடிக்கைகளுக்காக திணைக்களத்திற்குச் சொந்தமான E-SLIMS அமைப்புடன் நில அளவைத் திணைக்களத்தின் அளவீட்டு தரவு முறைமை ஒருங்கிணைத்து அப்புறப்படுத்தக்கூடிய மற்றும் | காணிப்பதிவேடொன்று அல்லது அரச காணிகள் தொடர்பான தரவு அமைப்பொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அப்புறப்படுத்தக்கூடிய காணிகளின் விபரங்களைக் கொண்ட காணி தரவு வங்கியொன்றை நிறுவுவதற்கு சுற்றுலா மற்றும் காணி அமைசசின் மூலம் அமைச்சரவைப் பத்திரமொன்று அனுப்பப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2008 ஆம் ஆணடில்ரூபா 12,000,000 இற்கு வாங்கப்பட்ட KH-5690 ரக வாகனம் அகற்றப்பட வேண்டிய போதிலும் இந்த அறிக்கையின் திகதி வரை அது அகற்றப்படவில்லை. | திணைக்களத்தில் இயங்கும் நிலையில் இல்லாத வாகனங்களை திருத்துவது தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன்KH 5690 இலக்கம் கொண்ட வாகனம் தொடர்பில் 2022.09.30 அன்று வழங்கிய தீர்மானத்தின் பிரகாரம் அதனை அகற்றாது பழுது பார்த்து பயன்படுத்துவதற்கு, வேறு அரச நிறுவனமொன்றிற்கு கையளிப்பதற்கு அல்லது , பொது ஏலத்தில் விற்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பொருத்தமான விதத்தில் அகற்றப்பட வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் செயலாற்றல் அறிக்கை மூலம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் இலக்காக காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் வழங்குதல் மற்றும் கொடுப்பனவு பத்திரம் தயாரித்தல் என்பன குறிப்பிடப்பட்டுள்ள போதும், திணைக்களம் மற்றும் மாகாண சபையினால் எதிர்பார்த்த நோக்கங்களை மேற்கொள்ளும் முன்னேற்றத்தை வேறாக குறிப்பிடாததால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான திணைக்களத்தின் பங்களிப்பை மதிப்பிட முடியாமலிருந்தது. | 2022 செயலாற்றல் அறிக்கையின் 2.1 இல் குறிப்பிடப்படும் அட்டவணையின் 1.i.ii இன் கீழ் குறிப்படும் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் தயாரிப்பது தொடர்பான இலக்குகள் மற்றும் முன்னேற்றம், இடை மாகாணங்கள் மற்றும் மாகாண சபைகளாக தனித்தனியாக குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும்,கொடுப்பனவு பத்திரங்களுக்கான வரி வரைபடங்கள் மற்றும் பிற ஆவணங்களுடன் கூடிய பரிந்துரைகள் அந்தந்த மாகாணங்களுக்கு இடையேயான அலுவலகங்கள் அல்லது மாகாண காணி அலுவலகங்களிலிருந்து அனுப்பப்படுவதுடன்கொடுப்பனவு பத்திரங்கள் | அனுமதிப்பத்திரம் வழங்குதல் மற்றும் கொடுப்பனவு பத்திரம் தயாரித்தல் முறையான கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டு,நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் இலக்குகளை அடைவதற்கு முடியுமான வகையில் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

இத்திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தினால் தயாரிக்கப்படுகின்றன. எனவே கொடுப்பனவு பத்திரங்கள் வேறாக குறிப்பிடப்படுவதற்கு இயலாது.

## 5. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி பின்வருமாறு.

| | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 53 | 34 | 19 |
| மூன்றாம் நிலை | 38 | 06 | 32 |
| இரண்டாம் நிலை | 673 | 473 | 200 |
| ஆரம்ப நிலை | 140 | 79 | 61 |
| மொத்தம் | 904 | 590 | 312 |

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) இத்திணைக்களத்தில் சிரேஷ்ட பதவியணியில் வெற்றிடங்கள் 19 உம்,மூன்றாம் நிலை பதவியணியில் 32 உம்,இரண்டாம் நிலை பதவியணியில் 200 மற்றும் மற்றும் ஆரம்ப பிரிவில் 61 உம் ஆக காணப்பட்ட அவ்வெற்றிடங்கள் 2023 மே வரையில் நிரப்பப்பட்டிருக்கவில்லை.<br><br>(ஆ) வெற்றிடங்களாக உள்ள பதவிகளில் உதவி காணி ஆணையாளர்களின் 11 வெற்றிடங்களும்,28 கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் 20 பணி அத்தியட்சகர்களின்,117 கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களின், 97 முகாமைத்துவ அலுவலர்களின் ,12 பதிவேடு காப்பாளர்கள் மற்றும் 18 அளவை உதவியாளர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டமை மேலும் அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்திற்குச் சொந்தமான 06 பிரதி காணி ஆணையாளர் அலுவலகங்கள் காணி ஆணையாளர் அலுவலகங்களாக மாற்றப்பட்டதன் மூலம் பிராந்திய அலுவலகங்களில் உருவாக்கப்பட்ட 04 சிரேஷ்ட மட்ட பதவிகள் சிரேஷ்ட மட்ட அதிகாரிகளைக் கொண்டு நிரப்பப்பட்டுள்ளன. அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைசிற்கு ஐந்து சிரேஷ்ட நிலை பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.மேலும், இலங்கை நிர்வாக சேவையில்.தரம் III பதவிகளின் 10 வெற்றிடங்களை நிரப்புமாறு அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது. அதன்படி, இத்திணைக்களத்தின் நிர்வாகத்திற்கு சிரேஷ்ட நிலை பணியிடங்கள் இன்றியமையாதவை என்பதால் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையை திருத்த முடியாது.<br><br>அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைசிற்கு ஐந்து சிரேஷ்ட நிலை பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |

(இ) இத்திணைக்களத்தில் 260 அபிவிருத்தி உதவியாளர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், சேவையாற்றுபவர்களின் எண்ணிக்கை 303 ஆக இருந்தமையால் 43 அபிவிருத்தி உதவியாளர்களின் மிகையொன்று காணப்பட்டது.

(ஈ) 2018 சனவரி 24 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை 02/2018 இன் படி, மனித வள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான மனித வள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை.

இதில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பதவிகள் 117 அல்லாது 121 வெற்றிடங்கள் தற்போது காணப்படுவதுடன் அந்த வெற்றிடங்கள் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தரம் I,IIமற்றும் III உத்தியோகத்தர்களாக இருப்பதுடன் IIIஆம் தரத்தின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்காக 195/10 ஆம் இலக்க 2016.11.29 ஆம் திகதிய இலங்கை தொழில்நுட்ப சேவைகள் அரசியலமைப்பின் 7.1 இன் பிரகாரம்திறந்த முறையின் கீழ் 70 சதவீதத்தையும், 7.2 இன் பிரகாரம்மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையின் கீழ் 30 சதவீதத்தையும ஆட்சேர்ப்பு செய்வதற்கான சாத்தியக்கூறுகளுக்கு உட்பட்டு, ஆட்சேர்ப்பு செயல்முறையை மறுபரிசீலனை செய்வதற்கு அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் குழுவிற்கு LCGD/AD/4/4/2021 மற்றும் 2023.03.02 ஆம் திகதி தெரிவிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது.இங்கு வெற்றிடமாக உள்ள 28 கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளை மேற்கண்ட அலுவலர்களின் பதவி உயர்வு நடைமுறையின் மூலம் நிரப்ப முடியும்,கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் I, II மற்றும் IIIதரத்திலான வெற்றிடங்கள் நிரப்பப்படும் வரை விசேடதரத்திலான வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாது. அங்கீகரிக்கப்பட்ட ஆவண காப்பாளர் பதவி 12 இற்குப் பதிலாக ஒரே ஒரு பதவி மட்டுமே காணப்படுவதுடன் அந்த பதவியை குறைக்குமாறு தெரிவிக்கப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.ஆவணப் பாதுகாவலர் என்ற தலைப்பு தற்போது திணைக்களத்தில் பயன்படுத்தப்படாததால், அந்தப் பதவிகளின் கடமைகளை முகாமைத்துவ சேவை அதிகாரிகள் பதவிகளைச் சேர்ந்த அதிகாரிகளே நிறைவேற்றுகின்றனர் என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கிறேன். அரச செலவின முகாமைத்துவம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட 21/1596/304/134ஆம் இலக்க 2021/8/31 ஆம் திகதிய அமைச்சரவைபத்திரத்தின் முடிவின்படி, புதிய ஆட்சேர்ப்புக்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளமையால் மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியவில்லை. மேலும் ஆரம்ப சேவைப் பிரிவுகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புமாறு பல்நோக்கு அபிவிருத்தி திணைக்களத்திற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.மேலும்,2022.02.05 ஆம்

வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும்.

திகதிய 01/2020 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் மூலம் அனைத்து ஆட்சேர்ப்புகளும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்படடிருந்தமையால் புதிய அதிகாரிகளை நியமிப்பதற்கு முடியாதிருந்தது.திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி உதவியாளர்கள்/அதிகாரிகளின் எண்ணிக்கை 260 ஆக இருந்ததுடன் 2021 ஆம் ஆண்டில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக பணியமர்த்தப்பட்ட அதிகாரிகளின் காரணமாக, அபிவிருத்தி உதவியாளர்/அதிகாரி பதவிகள் மிகையாக உள்ளபோதிலும் அந்த அதிகாரிகளை திணைக்களத்திற்கு அங்கீகரித்து தருமாறு குறிப்பிடப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன்தென் அங்கீகாரம் பெறப்பட்ட அந்த மிகை இரத்து செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். முகாமைத்துவத்தின் கருத்துரை வழங்கப்படவில்லை.